**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 32/2025 | வா.சா. | : 2 |
| பெயர் | : மணிவண்ணன் | த/பெ. | : வீரப்பன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : சாத்தம்பாடி |
| தேதி | : 04.02.2026 | வயது | : 46/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் வாதி தரப்பில் 2 வது சாட்சியாவேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது – சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.02.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.02.04 21:12:02 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.